**மதுராவல பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் வேலைகளுக்கான கடன் கொடுத்தோருக்குக் கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 15,525 ஆகும். மீளாய்வாண்டில் இதற்கான சீராக்கலைச் செய்யும்போது வேலைகளுக்கான கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைத்தும் திரண்ட நிதியக் கணக்கில் அதனை செலவு வைக்க வேண்டிய போதும், மூலதனச் சொத்துப் பழுதுபார்த்தல் கணக்கில் செலவு வைக்கப்பட்டதால் ஆண்டிற்கான மிகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் வேலைகளுக்கான கடன்பட்டோர் ரூபா 831,884 குறைவாகக் காட்டப்பட்டதைச் சீராக்குவதற்கு வேலைகளுக்கான கடன்பட்டோர் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் அதனைச் செலவு வைக்க வேண்டுமாயினும், வேலைகளுக்கான கடன்பட்டோர் கணக்கில் வரவு வைத்தும் மூலதன உதவிக் கணக்கில் செலவு வைத்துமிருந்ததால் மீளாய்வாண்டினது வருவாய் ரூபா 831,884 அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டினது கணக்காய்வுக் கட்டணமாகிய ரூபா 80,440 திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டதுடன், மீளாய்வாண்டினது கணக்காய்வுக் கட்டணம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதுமிருந்தது.

(ஈ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முத்திரைக் கட்டண நிலுவை மீதி ரூபா 11,028,975 ஆகும். எவ்வாறாயினும், இதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,875,932 ஆகக் காட்டியமையால் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,153,043 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டினது முத்திரைக் கட்டணத்தின் பொருட்டுப் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 223,645 குறைவாக இருந்தமையால் அதனைச் சீராக்கல் செய்வதற்கு முத்திரைக் கட்டண நிலுவைக் கணக்கில் வரவு வைத்தும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படவும் வேண்டுமாயினும், வருவாய்க்கான உதவிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதால் மீளாய்வாண்டின் வருவாய் ரூபா 223,645 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையினது 2.2.1(எ) பந்தி திருத்தஞ் செய்யப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 78,697,614 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,632,480 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டினது மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 84,825 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 2,717,305 அதிகரிப்பு தென்பட்டது.

## 2. வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 991 | 842 | 555 |
| (ii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 262 | 262 | - |

### 2.2.2 தீர்வை வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான தீர்வை வரி நிலுவை ரூபா 705,511 ஆகும். ஆண்டின்போது நிலுவையில் 43 சதவீதமான ரூபா 303,215 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது பட்டியலிடப்பட்ட வருவாய் ரூபா 573,407 ஆகும். அதில் 75 சதவீதமான ரூபா 432,485 அறவிடப்பட்டிருந்தது.

(இ) மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றில் உருப்படி மாற்றங்கள் ஏற்படும்போது பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 143(1) இன் பிரகாரம் மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் சபையினது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 2258 தீர்வை வரிக் கூறுகளிருந்தன. 2016 ஆம் ஆண்டு முடிவில் அது 2239 கூறுகளாகக் குறைவடைந்திருந்தன.

(உ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டிய தீர்வை வரி நிலுவை மீதி ரூபா 543,217 ஆகவிருந்தது. அதில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியான ரூபா 59,914 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியான ரூபா 119,716 என்பன உள்ளடங்கியிருந்தன. நிலுவையை பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 161 பிரிவின் ஆம் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 வேலைகளுக்கான வரி / வியாபார வரி / வர்த்தக அனுமதிப்பத்திரம்

வேலைகளுக்கான வரி / வியாபார வரி / வர்த்தக அனுமதிப்பத்திர வருவாய் என்பவற்றை அறவிடுவதற்குக் கணிப்புகளை மேற்கொண்டு, அதற்கமைய, பட்டியலிட்டு, தொகையை அறவிட வேண்டுமாயினும், வரி வருவாயாகப் பெறப்படும் தொகை ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 4,397,583 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 4,875,932 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

--------------------------------------------------------------------------------------

(அ) 2006 ஏப்ரல் 15 முதல் பிரதேச சபை நிறுவப்படும்போது புலத்சிங்கள பிரதேச சபைக்குச் சொந்தமாக இருந்த சொத்துக்களும் பொறுப்புகளும் புலத்சிங்கள மற்றும் மதுராவல பிரதேச சபைகளுக்கிடையே வெவ்வேறாக்கப்பட்டிருந்தபோதும், 2017 யூன் 11 ஆந் திகதியளவிலும் அச் சொத்துக்களையும் பொறுப்புகளையும் சட்டபூர்வமாகப் பங்கிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆரம்பத்தில் மதுராவல பிரதேச சபைக்குத் தற்போதுள்ள சபைக் காணியும் கட்டிடங்களும் அடங்கலாக மயானங்கள், ஏனைய காணிகள் மற்றும் கட்டிடங்கள் வழங்கப்பட்டிருந்தபோதும், தொடக்கத்திலான ஐந்தொகையில் காணி, கட்டிடங்கள் என்பன எதுவுமே காட்டப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபைக்குரிய காணி, கட்டிடங்கள் என்பவற்றைக் கணித்து அவற்றைக் கணக்கிலிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கோல உடைக்கான படி

--------------------------------------------

2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி ஆண்டொன்றிற்கு ஒருவருக்கு ரூபா 4,000 வீதம் பதவியணியைச் சேர்ந்த 86 பேருக்கு ரூபா 344,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி சுற்றறிக்கையின் (ஆ) பந்தியின் பிரகாரம் கோல உடைக்கான படியைப் பெறும் உத்தியோகத்தர்கள் கடமை நேரங்களின்போது கோல உடைகளை அணிந்திராமை தொடர்பாக 1991 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 27/91 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

## 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

**நூலகத்திற்குத் தளபாடங்களை வழங்குதல்**

----------------------------------------------------------------

மதுராவல நூலகத்திற்கு புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,339,732 பெறுமதியான மரத் தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நூலகத்திற்குத் தேவையான மாதிரியிலமைந்த பொருட்கள் வழங்கப்படாததுடன், சிறுவர்களுக்குப் பாதுகாப்பற்ற பிளாஸ்டிக் நாற்காலிகள் வழங்கப்பட்டுமிருந்தன.

(ஆ) நூலக ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மேசைகளின் பொருட்டு ஒரு தடவையில் ஒருவர் மாத்திரம் பயன்படுத்தக்கூடிய ஒவ்வொன்றும் ரூபா 9,950 பெறுமதியான 07 மேசைகள் ரூபா 69,650 பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தன.

(இ) ஒவ்வொன்றும் ரூபா 15,900 வீதப்படி ரூபா 445,200 பெறுமதியான 28 புத்தக ராக்கைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அப்புத்தக ராக்கைகள் வடிவத்திலும் அகலத்திலும் பெரிதாக அமைந்ததால் அச் சகல புத்தக ராக்கைகளதும் நடுத் தட்டுகள் புத்தகங்களது பாரம் காரணமாகக் கீழிறங்கியிருந்தன. மேலும், அதில் ஒரு தட்டு கழன்று இருந்தமையால், வழங்கப்பட்ட 28 புத்தக ராக்கைகளும் கழன்று விழக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கியவாறு பாதுகாப்பற்றிருந்தன.

## 3.3 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

----------------------------------------------------------------------------------------------------

(அ) திக்லந்த நீர்ச் செயற்திட்டம்

--------------------------------------------------

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 21 வீடுகளுக்கு நீர் வழங்குவதற்கு ரூபா 6,604,411 செலவழிக்கப்பட்டு 2016 ஒக்டோபர் 10 ஆந் திகதியன்று செயற்திட்டம் சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 யூன் 19 ஆந் திகதியளவிலும் நீர் வழங்கப்படாதிருந்தது.

(ii) நிர்மாணிக்கப்பட்ட கிணற்று நீர் களுத்துறை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் பரிசீலிக்கப்பட்டிருந்ததுடன், நீரில் உள்ள சாதகமற்ற கிருமிகள் காரணமாக அது நுகர்வுக்கு ஏற்றதல்ல என அறிக்கை வழங்கப்பட்டிருந்தது.

(iii) புரநெகும செயற்திட்டம் முடிவடைதலும் சுத்தமான நீரை வழங்கும் பொறுப்பு பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்படுதலும் காரணமாக சபை மேலதிக செலவினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(ஆ) ரெமுண நீர்ச் செயற்திட்டம்

-----------------------------------------------

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 17,800,877 செலவழிக்கப்பட்டு 74 குடும்பங்களுக்கு நீர் வழங்கும் நோக்குடன் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டு 2016 ஒக்டோபர் 10 ஆந் திகதி சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நீர்ச் செயற்திட்டத்திற்கு 400 வொட் மின்சாரம் தேவைப்பட்டிருந்ததுடன், 375 வொட் மின்சாரமே வழங்கப்பட்டமையால் நாளாந்தம் 2 மணித்தியாலங்களுக்கு 51 குடும்பங்களுக்கு மாத்திரமே நீர் வழங்கப்பட்டு, முறையான நீர் வழங்கலை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ii) காணி உரிமையாளர்கள் சிலரால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதால் மின் பிறப்பாக்கி ஒன்றின் மூலம் மின் சுற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்ய முடியாதிருந்தது.

(iii) நிலத்தடியில் உள்ள நீர்க்குழாய்கள் அடிக்கடி பழுதடைதல், நீர்க்கசிவு, நீர்த்தாங்கியின் சுயமாக நீர் நிரம்புவதற்கு உதவும் வேல்வ் செயற்படாது போதல், மின் மானிகள் செயற்படாது போதல் போன்ற காரணங்களால் அவற்றை நிவர்த்தி செய்வதற்குச் சபையின் நிதியம் செலவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) அங்குறுவாதொட பலநோக்கு நிலையம்

---------------------------------------------------------------------

மருத்துவ சிகிச்சைக் கூடம் மற்றும் 160 ஆசனங்களுடனான மண்டபம் ஒன்றிற்குமென நிர்மாணிக்கப்பட்ட 2 கட்டிடங்கள் புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 22,230,385 மதிப்பிடப்பட்ட செலவினத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2016 நவெம்பர் 18 ஆந் திகதி இது சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அவதானிப்புகள் பின்வருமாறு.

(i) 2017 யூன் 19 ஆந் திகதியளவில் ஒரு கிழமையில் 2 நாட்களுக்கு மாத்திரமே மருத்துவ சிகிச்சைக் கூடம் செயற்பட்டிருந்ததுடன் 160 ஆசனங்களையுடைய மண்டபம் 2 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டுமிருந்தது.

(ii) இந் நிலையத்திற்கு வழங்கப்பட்ட 24 நாற்காலிகளும் பொருட் கட்டளையில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்ப இருக்கவில்லை.

(iii) இதற்கமைய, ரூபா 22,320,385 பெறுமதியான கட்டிடம் மற்றும் ரூபா 1,643,396 பெறுமதியான தளபாடங்களுடன் ரூபா 23,963,781 கூட்டுத் தொகையில் அமைக்கப்பட்ட பலநோக்கு நிலையம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட இழப்புகள்**

---------------------------------------------------

உள்ளூராட்சி ஆணையாளருக்கு ரூபா 1,412,545 கொடுப்பனவு செய்யப்பட்டுப் பெறப்பட்ட டபள் கெப் வாகனம் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி விபத்துக்குள்ளானது இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாகனத்தின் உரித்தை சபை பெற்றிருக்கவில்லை.

(ii) வாகனத்தின் வெளிப் புறத்தில் அல்லாது இயந்திரம் மாத்திரமே சேதமடைந்ததுடன், 3 பரிசீலனைச் சபைகள் விபத்தை விசாரித்திருந்த போதும், 2017 யூன் 19 ஆந் திகதியளவிலும் இழப்பிற்கான அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

(iii) பிரதேச சபைக் காவலாளியால் வாகனஞ் செலுத்தப்படுகையில் விபத்து ஏற்பட்டுள்ளதுடன், வாகனத்தின் இயந்திரத்தினது உட்பகுதியாவும் உடைந்தமையால் புதிய இயந்திரத்தைப் பொருத்துவதற்கு முகவர் நிறுவனம் ரூபா 3,089,810 (பெறுமதி சேர் வரி நீங்கலாக) க்கான மதிப்பீட்டைச் சமர்ப்பித்திருந்தது.

## 3.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் சமய வழிபாடு, புண்ணிய கைங்கரியம் கலாசாரம், சுகாதார, வினோத, கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒரு ஆண்டில் ரூபா 1,000 க்கு மேற்பட்ட செலவினம் ஏற்படின் அமைச்சரின் முன் கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறு அங்கீகாரம் பெறாது ரூபா 122,632 செலவிடப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்து முகாமைத்துவம்

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) பாதீடு